பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

13 02 2026 FRIDAY 6 30 PM

## வணக்கம் - மாநிலச் செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

1) வேளாண் கட்டமைப்பு நிதியத்திற்கான ஒதுக்கீடு, இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

2) ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு துறையின் வளர்ச்சிக்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்

3) தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணையத்தின் குழுவினர் இரண்டாவது நாளாக இன்றும் சென்னையில் ஆலோசனை மேற்கோண்டனர்.

4) தேர்தல் தோல்வி பயம் காரணமாக திமுக அரசு மகளிர் உரிமைத்தொகையை முன்கூட்டியே விடுவித்துள்ளதாக அஇஅதிமுக, பிஜேபி மற்றும் பாமக குற்றம் சாட்டியுள்ளன.

5) உலக பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின், Promod Bhagat இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

வேளாண் கட்டமைப்பு நிதியத்திற்கான ஒதுக்கீடு, இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

இன்று புதுதில்லியில் பிரதமர் அலுவலகத்திற்கான புதிய அலுவலகத்தை திறந்து வைத்த பின்னர், இதற்கான கோப்பில் கையெழுத்திட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான இந்த நிதியத்திற்கான ஒதுக்கீடு, தற்போது 2 லட்சம் கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

சாலை விபத்துகளில் பாதிக்கப்படுவோருக்கு ஒன்றரை லட்சம் ரூபாய் அளவிற்கு இலவச சிகிச்சை வழங்கும் திட்டத்திற்கும் தாம் ஒப்புதல் அளித்துள்ளதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல், லட்சாதிபதி சகோதரிகள் திட்டத்திற்கான இலக்கை 6 கோடி ரூபாயாக உயர்த்துவதற்கும் தாம் ஒப்புதல் அளித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் கட்ட புத்தொழில் இந்தியா நிதியத்திற்கு 10 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்குவதற்கும் தாம் ஒப்புதல் அளித்துள்ளதாக பிரதமர் கூறியுள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்ட இந்த நடவடிக்கைகள் உதவிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் அலுவலகத்திற்கான புதிய வளாகம், தேசத்தின் நலனுக்கே முன்னுரிமை என்ற அடிப்படையில் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளும் என்றும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**>>>>><<<<<**

ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு துறையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில், ஊடகவியலாளர்களுக்கான இயக்கத்தை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

போலி செய்திகள் பரப்பப்படுவது தடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையம் அவர் வலியுறுத்தினார்.

ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் செய்திகள் மக்களின் நம்பிகைகையை பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் துறை விரைவான வளர்ச்சியை கண்டு வருவதாகவும், கூடுதல் வேலைவாய்ப்புகளை வழங்கி வருவதாகவும் டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணையக் குழுவினர் இரண்டாவது நாளாக இன்றும் சென்னையில் ஆலோசனை மேற்கொண்டனர்.

துணை தேர்தல் ஆணையர்கள், திரு. மனீஷ் கார்க், திரு. சஞ்சய் குமார், திரு. பானுபிரகாஷ் யெட்டூரு உட்பட 7 பேர் கொண்ட குழுவினர் இந்த ஆலோசனையை மேற்கொண்டனர்.

மாவட்ட வாரியாக ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்கள் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

தேர்தல் தோல்வி பயம் காரணமாக, 3 மாதங்களுக்கான மகளிர் உரிமைத் தொகையுடன் சேர்த்து, கோடைகால சிறப்பு தொகையையும் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வழங்கியுள்ளதாக, அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த ஆண்டுகளில் கோடை காலம் வரவில்லையா என்றும் வினவியுள்ளார்.

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துள்ள நிலையில், தேர்தலை கருத்தில் கொண்டு, முதலமைச்சர் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கையை பெண்கள் நம்ப மாட்டார்கள் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி குறிப்பிட்டுள்ளார்.

பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரனும், தேர்தல் தோல்வி பயம் காரணமாக திமுக அரசு 5 ஆயிரம் ரூபாயை விடுவித்துள்ளதாக குறை கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற 2021ஆம் ஆண்டிலிருந்து 2023ஆம் ஆண்டு வரை 28 ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத் தொகையை வழங்காமல் ஏமாற்றிவிட்டு, தற்போது வெளியிட்டுள்ள இந்த அறிவிப்பை நம்பி மக்கள் ஏமாறமாட்டார்கள் என்றும் கூறியுள்ளார்.

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், பணத்தை கொடுத்தாவது மக்களின் எதிர்ப்பை குறைக்க முடியுமா என்ற எண்ணத்தில் முதலமைச்சர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக கூறியுள்ளார்.

இதுபோன்று எத்தனை நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், மக்களின் அரசுக்கு எதிரான கோபம் குறையாது என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

தோல்வி பயத்தின் காரணமாக எத்தனை அறிவிப்புகளை வெளியிட்டாலும், மக்கள் மன்றத்தில் அது எடுபடாது என்று அமமுக பொதுச்செயலாளர் திரு. டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சரின் இந்த நடவடிக்கை மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. வீரபாண்டியன் கூறியுள்ளார்.

காங்கிரஸ் கட்சி தலைவர்களும் முதலமைச்சரின் நடவடிக்கைக்கு வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

>>>>><<<<<

தேர்தலை கருத்தில் கொண்டு தான், கோடை கால நிதி வழங்கப்படுவதாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் தவறானவை என்று மாநில அமைச்சர் திரு. ரகுபதி கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பொங்கல் பண்டிகையை ஒட்டி மூவாயிரம் ரூபாய் வழங்கப்பட்டதும், மக்கள் நலனை கருத்தில் கொண்டு தான் என்று குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு மாதங்களுக்குள் தமிழக மக்களுக்கு 9 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு. ரகுபதி தெரிவித்தார்.

>>>>><<<<<

மகளிர் நலனுக்கு தமிழக அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக சிறு குறு தொழில்துறை அமைச்சர் திரு. தாமோ. அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூரில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

கர்ப்பிணி பெண்களின் நலனை கருத்தில் கொண்டு இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

கௌரவ விரிவுரையாளர்களின் கோரிக்கைகள் குறித்து, முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என்று மாநில உயர்கல்வி அமைச்சர் திரு. கோவி செழியன் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக வளாகத்தில் சோழர் அருங்காட்சியகத்திற்கான கட்டுமானப் பணி தொடக்க விழாவில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

>>>>><<<<<

தமிழகம் முழுவதும், நிலப்பரப்புகளில் பறவைகள் கணக்கெடுக்கும் பணி, நாளையும், நாளை மறுநாளும் நடைபெறவுள்ளதாக மாநில அரசு அறிவித்துள்ளது.

வனக்கோட்டம் தோறும் குறைந்தபட்சம் 25 இடங்களில் உள்ள நிலப்பரப்புகளில் இந்த கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பறவையியல் பார்வையாளர்கள், தன்னார்வலர்கள், தொழில்முறை புகைப்பட கலைஞர்கள் மற்றும் வனத்துறை அலுவலர்கள் இதில் பங்கேற்கவுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மேட்டுப்பாளையம் - தூத்துக்குடி இடையேயான சிறப்பு வாராந்திர ரயில் சேவையை ஆண்டுதோறும் இயக்குவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக தெற்கு ரயில்வேயின் பொதுமேலாளர் திரு. ஆர்.என். சிங் கூறியுள்ளார்.

மேட்டுப்பாளையம் ரயில் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை இன்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

23 கோடி ரூபாய் செலவில் பணிகள் நடைபெற்று வருவதாகவும் திரு. ஆர்.என். சிங் தெரிவித்தார்.

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

கடலூர் மாவட்டத்திற்கு உட்பட்ட 10 ஊராட்சிகளில் நீர்த்தேக்க தொட்டிகள் கட்டுவதற்கான பணிகளை மாநில அமைச்சர் திரு. சி.வி. கணேசன் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

பெரம்பலூர் மாவட்டம், கொளக்கானத்தத்தில் கல்லூரி மாணவர்களுக்கான சமூகநீதி விடுதிகளை மாநில அமைச்சர்கள் திரு. மெய்யநாதன், திரு. சிவசங்கர் ஆகியோர் திறந்து வைத்தனர்.

>>>>><<<<<

காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இன்று நடைபெற்ற முகாமில் 300க்கு மேற்பட்டோர் பங்கேற்றனர். இதில், 148 பேருக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

>>>>><<<<<

விழுப்புரம் - திருவண்ணாமலை இடையே வரும் ஞாயிற்றுக்கிழமையும், திங்கள்கிழமையும் முன்பதிவில்லா சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

>>>>><<<<<

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அருகே, வீட்டை இடிக்கும் பணியின் போது, சுவர் இடிந்து விழுந்ததில் மாணவர்கள் இருவர் உயிரிழந்தனர்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின், Promod Bhagat இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

பஹ்ரைனில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில், அவர் 21-11, 21-11 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் Mongkhon Bunsun-ஐ வென்றார்.

நவீன் சிவக்குமார், Manisha Ramadass, Nityashree Sumathi Sivan ஆகியோரும் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் Promod Bhagat - Sukant Kadam இணையும் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

சென்னை சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Snehit Suravajjula காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர் 9-11, 15-17, 11-4, 11-6, 18-16 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Mizuki Oikawa-வை வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் சத்யன் ஞானசேகரன் - ஹர்மித் தேசாய் இணையும், Ankur Bhattacharjee - Payas jain இணையும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவில், Payas jain - Syndrela Das மற்றும் ஹர்மித் தேசாய் - Yashaswini Ghorpade இணைகளும், அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன.

மகளிர் இரட்டையர் பிரிவில் Lakshita Narang – Hardee Patel இணையும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>>End<<<<<